1990 மார்ச் 31]

மத்திய அரசோடும் தொடர்பு கொண்டு அதிகப்படியாக கெமிக்கல் தொழிற்சாலைகளை நம்முடைய தமிழகத்திலே உருவாக்குவதற்குச் செயல் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையில் இதற்கான முயற்சிகள் விரிவாகவும், விரைவாகவும் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, தமிழ்நாட்டிலே செயற்கை வைரம் உற்பத்தி செய்வதற்கு ரா மெட்டீரியல், மூலப்பொருளாகத் தேவைப்படும் '' தளம் '' உற்பத்திக்கு ஏற்கெனவே மேட்டுப் பாளையத்தில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இருப்பினும் 70 பர்சென்ட் பற்றாக்குறை இருக்கிறது. எனவே இந்தப் பற்றாக்குறையை நீக்குவதற்கு ஒரு தள தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மூலக்கேள்வியோடு தொடர்புடையது அல்ல. எனினும் திரு. தீட்சிதர் அவர்களுடைய தொகுதியோடு தொடர்புடையது என்ற காரணத்தால் கவனிக்கப்படும்.

அரவக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

*3026—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரவக்குறிச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், அரவக்குறிச்சியில் ஒற்றை ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் 28—7—1989 அன்று திறக்கப்பட்டு, நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தீயணைப்புத் துறையிலே இருக்கின்ற வண்டிகள் பழுதடைந்து இருக்கின்ற நிலைமையிலே அவற்றைச் சரி செய்தும், அதே நேரத்தில் அங்கே ஆம்புலன்ஸ் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கும் அரசு உகந்த நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 மார்ச் 31

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளாகப் பழுதடைந்தவற்றை சரி செய்யத் தான் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் நெல்லிக்குப்பத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று பெரியளவிற்கு ஏற்படுத்தப்பட்டது. அந்த இடமும் தனியாரிடத்திலே இருக்கிறது. அதற்கு ஊர்தியும் கிடையாது. வாடகை இடத்தில் போடப்பட்டுள்ள அந்தத் தீயணைப்பு நிலையத்தை எடுத்து, அங்கே நிரந்தரமான தீயணைப்பு நிலையத்திற்கான எல்லாவிதமான ஏற்பாடுகளைச் செய்யவும் அதற்குத் தனியாக தீயணைப்பு ஊர்தி அளிக்கவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 17 தீயணைப்பு நிலையங்களும் அப்போது அறிவித்தவாறு இப்போது தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்தத் தீயணைப்பு நிலையத்தைப் பற்றி தனியாக எழுதுவாரேயானால் அது கவனிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவையில், இந்தத் தீயணைப்பு நிலையங்களிலுள்ள வாகனங்கள் நவீனப்படுத்தப்படுவது குறித்து ஒரு கேள்வி எழுப்பப்பட்டபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறை அதிகாரியின் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு குழு அவற்றைப்பற்றி ஆய்வு செய்யும் என்று இங்கே தெரிவித்ததாக எனக்கு நினைவு. ஆனால், சம்பந்தப்பட்ட அந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், அந்தக் காவல் துறை அதிகாரி தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கிற குழு, தீயணைப்பு சம்பந்தப்பட்ட விவரங்களை ஆய்வில் எடுத்துக் கொள்ளவில்லை; காவல் துறை சம்பந்தப்பட்டவை தான் ஆய்வு செய்யப்படுகின்றன என்ற விவரங்களைச் சொல்கிறார்கள். அது சரிதானா என்பதை அறிய விரும்புவதோடு, இதையும் சேர்த்து அந்த ஆய்வு நடத்தப்பட்டு சீர்செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக காவல் துறை மானியத்தோடு இணைத்து தான் இந்தத் தீயணைப்புத் துறை மானியமும் விவாதிக்கப்படுகிறது. எனவே காவல் துறைக்கும், இந்தத் தீயணைப்புப் பணியிலே பங்குண்டு. அப்படி அமைக்கப்பட்டுள்ள குழு இதையும் வலியுறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

1990 மார்ச் 31]

திரு. கொ. மாதப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாலக்கோடு தொகுதியில் கடந்த மாதம் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு, அந்த தீயணைப்பு வண்டியில் பைப் பழையது, புதியதாக மாற்ற .... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரவக்குறிச்சி தொடர்புடையது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரியில் பழைய .... (மணியடிக்கப்பெற்றது).

திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமாகப் பரவும் தீயை அணைக்க தமிழக அரசு புதிய, நவீன இயந்திரங்களை எதுவும் வாங்கி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத்தான் காவிரி ஒப்பந்தத்தை விரைவுபடுத்திக்கொண்டு இருக்கிறோம்.

தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*2134—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வாழும் நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் புறம்போக்கு மற்றும் ஆட்சேபணை யற்ற நிலங்களில் ஆக்கிரமித்து வீடுகள்/குடிசைகள் கட்டியுள்ளதை வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆலங்குளம் தாலுக்கா.

*7750—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :